DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 291/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| Name | சாமுவேல் அருண்பாண்டியன் |
|---|---|
| Father / Husband Name | பட்டுதுரை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.11.2024**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மாமண்டூர் கிராமத்தில் குடியிருந்து பெட்ரோல் பங்க் வைத்திருக்கிறேன். சாட்சி பியூலா எனது அம்மா ஆவார். கடந்த 15.06.2013 ம் தேதி இரவு 12.30 மணிக்கு நான் பெட்ரோல் பங்கின் கணக்கை முடித்து வீட்டிற்கு வந்தேன். எனது அம்மாவுடன் கதவை பூட்டாமல் தூங்கிக் கொண்டிருந்தோம். அதிகாலை 3.00 மணியளவில் எனது அம்மா கழுத்தில் இருந்த செயினை காணவில்லை என்று திடீரென்று கத்தினார். யாரோ எடுத்து சென்றது போல் உள்ளது என்று சொன்னார். நான் எழுந்து வெளியில் வந்து பார்தபோது பின் கதவு திறந்திருந்தது. தோட்டத்தில் யாரோ ஓடுவது போல் சத்தம் கேட்டது. தோட்டத்திற்கு சென்று பார்த்த போது இருட்டாக இருந்தது. நான் மீண்டும் உள்ளே வந்துவிட்டேன். நான் வீட்டின் பெட் ரூமில் பார்த்தபோது பீரோ திரந்திருந்தது. பீரோவில் இருந்த 18 பவுன் நகைகள் காணாமல் சென்றிருந்தது. பிரேஸ்லெட்–1 (1 சவரன்) வலையல் –2 (4 சவரன்) கம்மல் 2 ஜோடி (முக்கால் சவரன்) அம்மாவின் தாலி செயின் (11 சவரன்) ஆகியவை காணாமல் போனது. வீட்டில் சத்தம் போட்டதை கேட்டு அருகில் உள்ளவர்கள் வந்தார்கள். இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் அசாஆ 1 க குறியீடு செய்யப்படுகிறது).** நகைகள் கிடைத்துவிட்டதாக படாளம் காவல் ஆய்வாளர் 1 1/2 மாதத்திற்கு பிறகு எனக்கு போன் மூலம் அழைத்தார். நான் நகைகளை பார்க்க காவல் நிலையம் சென்றபோது ஆஜர் 1ம் எதிரி நகையை திருடியவர்களில் ஒருவர் என்று போலிசார் என்னிடம் அடையாளம் காண்பித்தார். நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடைய அம்மாவுடையது. **(புகைப்படத்தில் உள்ள நகைகள் சபொஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நகைகள் கடந்த 16.06.2013 ம் தேதி விடியற்காலை 3.00 மணிக்கு காணாமல் போனது. நகைகளை திரிடி சென்றவரை நான் நேரடியாக பார்த்தேனா என்றால்

இல்லை. எத்தனை பேர் வந்து திருடினார்கள் என்றும் அவர்களின் அங்க அடையாளங்களும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் விடியற்காலை 3.00 மணிக்கு காணாமல் சென்ற பொருட்களுக்கு காலை 11.00 மணிக்குதான் முதல் தகவல் காவல் நிலையத்தில் சொன்னேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகள் நகையை திருடவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் நகை வீட்டில் இருந்திருந்தால் நாங்கள் கதவை பூட்டிவிட்டு தூங்கி இருப்பேன் என்றால் வீட்டின் முக்கிய கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. நான் படுத்திருந்த அறையை தான் தாப்பாள் போடவில்லை.

3. எதற்காக குறிப்பிட்டு நான் புகாரில் தாழ்ப்பாள் போடாமல் தூங்கினேன் என்று சொன்னேன் என்றால் போலிசார் என்னை விசாரித்தபோது ஏன் கதவை பூட்டவில்லை என்று கேட்டார். நான் வீட்டின் கதவை பூட்டியது பற்றி சொல்லியிருந்தேன். 1ம் எதிரி போலிசாரால் அடையாளம் காட்டிதான் என்க்கு தெரியும் என்றால் சரிதான். எனவே எதிரிகள் யாரும் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் அங்க அடையாளங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 291/2024

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பியூலா |
| Father / Husband Name | பட்டுதுரை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.11.2024**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மாமண்டூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 15.06.2013 ம் தேதி அதிகாலை 1மணிக்கு என் மகன் வேலை முடித்து வந்தார். வெளிகதவுகள் அனைத்தும் பூட்டிவிட்டு நானும் என் மகனும் இருந்த அரையில் ஏசி போட்டதால் கதவை சாதாரணமாக சாத்தி வைத்திருந்தோம். அதிகாலை 3.00 மணிக்கு யாரோ என் கழுத்தில் இருந்த செயினை இழுத்தது போல் இருந்தது. அது தெரிந்தவுடன் நான் எழுந்து என் மகனை எழுப்பி பார்த்து சொன்னேன். என் மகன் வெளியே சென்று பார்த்தபோது தோட்டத்தில் இருட்டாக இருந்தது. பூட்டை உடைக்காமால் தாழ்ப்பாளை மட்டும் உடைத்து உள்ளே நுழைந்துள்ளார்கள். பீரோவில் இருந்த நகைகள் சுமார் 25 சவரன் காணாமல் சென்றது. இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் என் மகன் புகார் கொடுத்தார். நகைகள் கிடைத்ததாக என் மகன் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் முதல் விசாரணையில் தேதி மாற்றி சொன்னேன் என்றால் பல வருடங்கள் ஆகியதால் குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. நகையை எத்தனை பேர் யார் எடுத்து சென்றார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் எதிரிகள் என் வீட்டிற்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் யார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கின் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் புகாரை கொடுக்கவில்லை என்றாலும் மற்றவர்கள் சொன்னதை வைத்துதான் விவரங்கள் தெரிந்து கொண்டேன் என்றாலும் சரிதான்.